பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 09 திங்கட்கிழமை 21.02.2022 கதிர் 108

**இது ரகசியம் அல்ல!**

அதிகாரம் வந்து விட்டால் சிலருக்கு என்ன பேசுவது, ஏது பேசுவது என்று புரிவதில்லை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என்னவென்றால் தாம் வாயால் உதிர்ப்பவை எல்லாம் சுற்று நிருபங்கள் என்கின்றார்.

நிதி அமைச்சர் பஸில் ☞2

# மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டியது அரசின் பொறுப்பு

## யாழில் சு.க. மாநாட்டில் மைத்திரி சுட்டிக்காட்டு



(இ.கலையமுதன், எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டியது தற்போதைய அரசின் பொறுப்பு என முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

யாழ்., வடமராட்சி, உடுப்பிட்டியில் நேற்று மாலை நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். ☞2

## வடக்கு மாகாணத் தமிழ் மக்களுக்கு என் நன்றிக் கடன் என்றும் இருக்கும்

### மைத்திரி நேற்று தெரிவிப்பு



(இ.கலையமுதன், எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத் தமிழ் மக்களுக்கு எனது நன்றிக் கடன் என்றும் இருக்கும் என்று முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

யாழ்., வடமராட்சி, உடுப்பிட்டியில் நேற்று மாலை நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ☞2

## பழிவாங்கும் பயங்கரவாதச் சட்டம்; முழுமையாகத் திருத்த வேண்டும்!

### சந்திரிகா அம்மையார் வலியுறுத்து



சிறுபான்மை மக்களை அடக்குவதற்காகவே ராஜபக்ஷக்களால் பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்பட்டது – பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்று தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

பயங்கரவாதத் ☞2

## பயங்கரவாதத் தடைச் சட்டம் உடன் நீக்கப்பட வேண்டும்!

### எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை என்கின்றார் கூட்டமைப்பின் தலைவர்



பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றுமுழுதாக நீக்கப்பட வேண்டும். அதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. இந்த நிலைப்பாட்டில் நாம் அன்றும் இன்றும் உறுதியாக நிற்கின்றோம்.

– இவ்வாறு வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் ☞2

## நாடளாவிய ரீதியில் இன்று மின்வெட்டு!

இலங்கை மின்சார சபையின் கோரிக்கைக்கமைய நாடளாவிய ரீதியில் இன்று மின்வெட்டை அமுல்படுத்துவதற்குப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

போதிய மின்சார உற்பத்தி இல்லாத காரணத்தால் இன்று காலை 8.30 மணி முதல் இரவு 7.30 மணி வரை ☞2

## பாடசாலை மாணவர்களுக்கு இரண்டாம் கட்டத் தடுப்பூசி

### யாழில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம் மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு இன்று இரண்டாம் கட்டத் தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பமாகின்றன.

கடந்த மூன்று மாதங்களுக்கு முதல் தமது முதலாவது தடுப்பூசிகளைப் ☞2

## முல்லைத்தீவில் முன்னணியின் தேசிய மாநாடு



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 2022ஆம் ஆண்டுக்கான வருடாந்த தேசிய மாநாடு கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வு முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ☞2




## இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் புதிய நிர்வாகிகள்



இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நேற்று கொழும்பு தமிழ்ச் சங்க கலாவினோதன் மண்டபத்தில் நடைபெற்றது.

அதன்படி இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ராஜபக்ஷவோ, யுத்தத்துக்கு ஆயுதங்களை வட கொரியாவிடமிருந்து கறுப்புப் பணத்தில் வாங்கினோம் என்று ஊழல், மோசடி விடயங்களை அவிழ்த்து விடுகின்றார்.

கறுப்புப் பணச் சந்தையுடன் அரசாங்கமே 'டீல்' பண்ணுகின்றது, அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்த நாட்டுடன் இலங்கை ஆயுதக் கொள்வனவு செய்கின்றது என்பவை எல்லாம் இந்தச் சொல்லாடலின் மூலம் ஒப்புதல் வாக்குமூலமாக வருகின்றன.

அதே போலத்தான் நேற்றுமுன்தினம் மானிப்பாய் பிப்பிலியில் வைத்து கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறிய கருத்தும்.

"பிரபாகரன் சரண் அடைந்து உயிரிழந்தமை எனக்கு கவலை அளிக்கின்றது" - என்று டக்ளஸ் கூறியிருக்கின்றார்.

இந்த விடயத்தை ஒட்டி புதைக்கப்பட்ட பல உண்மைகள் வெளியே தெரியாமல் கிடக்கலாம். அவை என்றோ ஒரு நாள் வெளியாகும்.

தலைவர் பிரபாகரன் சரண் அடையவில்லை என்பது அமைச்சர் டக்ளஸுக்கும் நன்கு தெரியும்.

ஆனால் அவரின் கூற்றில் வேறு ஒரு விடயம் தொக்கி நிற்கின்றது.

அது -

உயிருடன் கிட்டிய பிரபாகரனை அவரது அரசு (அமைச்சர் டக்ளஸின் அரசு) முகத்தில் வெட்டுக் காயம் அல்லது சூட்டுக் காயத்துடன் பிணமாக்கிக் கொண்டது என்பதுதான் அது.

சரணடைந்த போராளிகள் காணாமல் போன சூத்திரத்தின் விளக்கத்துக்கு முதல் அடி - வியாக்கியானம் - எடுத்துக் கொடுக்கின்றார் அமைச்சர் டக்ளஸ்.

வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளில் இருந்து ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் வரை கவனத்தில் எடுக்க வேண்டிய ஒப்புதல் வாக்குமூலமே இது...!

★ ★ ★

போகிற போக்கில் அடுத்த கட்டமாக பெற்றோல், டீசல் போன்றவற்றின் விலை லீற்றருக்கு ஐம்பது ரூபாவால் அதிகரிக்கும் என்றே கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

இரண்டு, மூன்று கட்டங்களாகப் பிரித்து இந்த விலை அதிகரிப்பு ஓரிரு மாதங்களில் நடைமுறைக்கு வருவதற்கு வாய்ப்புண்டு.

பாண், ரீ போன்றவற்றின் விலை இந்த வருட முடிவுக்குள் இருநூறு ரூபாவை எட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அரசின் கொடுப்பனவுக் கடப்பாடுகளை நிறைவு செய்வதற்கு பணநோட்டுக்களைக் கண்மூடித்தனமாக அச்சிட்டு புழக்கத்துக்குத் தள்ளிக் கொண்டிருந்தால் இப்படித்தானாகும்.

ஒரு சதம், இரண்டு சதம், ஐந்து சதம், பத்து சதம், இருபத்தியைந்து சதம் நாணயங்கள் புழக்கத்தில் இல்லாமல் போய் விட்டன. இனி அடுத்த கட்டமாக ஒரு ரூபா, இரண்டு ரூபா குற்றிகள் காணாமல் போகும்.

இப்போது புழக்கத்துக்கு வந்திருக்கும் இருபது ரூபா குற்றியைத் தொடர்ந்து இனி ஐம்பது ரூபா, நூறு ரூபா குற்றி புழக்கத்துக்கு வரலாம். பத்தாயிரம் ரூபா நோட்டும் புழக்கத்துக்கு விரைவில் வருவதும் தவிர்க்க முடியாததாக இருக்கும்.

பணத்தின் பெறுமதி எப்படி எல்லாம் வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கின்றது என்பதற்கு இவை எல்லாம் உதாரணங்கள்.

- மின்னல் -

## இலங்கை தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஒன்றியத்தின் புதிய தலைவராக எஸ்.ஸ்ரீகஜன் தெரிவுசெய்யப்பட்டார். செயலாளராக கே.ஜெயந்திரன் தெரிவு செய்யப்பட்டார்.

உப தலைவர்களாக லியோ நிரோ தர்னும், தர்மினி பத்மநாதனும், உப செயலாளராக சு.சிவசண்முகநாதனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

பொருளாளராக ப.விக்னேஸ்வரனும், உப பொருளாளராக எஸ் வாஸ் கூஞ்ஞைனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிர்வாகக் குழு உறுப்பினர்களாக ஆர். சிவராஜா, எஸ். அனந்த் பால கிட்ணர், என். ஜெயகாந்தன், வீ.பிரியதர்ன், ஆர். சேதுராமன், கி. லக்ஸ்மன் சிசில், பிரியங்கா சந்திரசேகரம், கே.ஹரேந்திரன், கே.பிரசன்னகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும், வடக்கு மாகாண இணைப்பாளராக கணபதி சர்வானந்தா, கிழக்கு மாகாண இணைப்பாளராக எஸ். சரவணன் மற்றும் மலையக இணைப்பாளராக சிவலிங்கம் சிவகுமாரன் ஆகியோருடன் ஒன்றியத்தின் மேலதிக இணைப்பாளராக தர்மினி பத்மநாதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

## மீனவர்கள் எதிர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது ஏனைய கட்சிகளை விட ஒரு சிறந்த கட்சி. எமது கட்சியில் சிறியவர், பெரியவர் என்று நாங்கள் பார்ப்பதில்லை.

எங்களது சுதந்திரக் கட்சி கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர்கள் வாழும் பிரதேசத்தில் அதிகூடிய வாக்குகளைப் பெற்று ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைப் பெற்றிருக்கின்றது. வரலாற்றில் ஒரு முக்கியமான விடயமாகும். அதற்கு நான் அனைத்து உடுப்பிட்டித் தொகுதி மக்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு எதிர்வரும் காலத்தில் மாகாண சபை, உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின்போதும் எமது கட்சியைப் பலப்படுத்துவதற்கு அதிகளவில் மக்கள் ஆதரவளிக்க வேண்டும். எமக்கு ஆதரவு அளித்தால் நல்ல நிலைக்கு எமது கட்சியை முன்நோக்கிக் கொண்டு செல்வோம்.

நாட்டில் தற்போது மக்கள் அதிகளவு பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின்றார்கள். எரிவாயு, பசளை, அத்தியாவசியப் பொருள் விலையேற்றம் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு அவர்கள் முகம்கொடுக்கின்றார்கள். அவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டியுள்ளது.

நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் வட பகுதியில் பல திட்டங்களை முன்னெடுத்திருந்தேன். காணி விடுவிப்பு மற்றும் வீதி புனரமைப்பு போன்ற பல்வேறுபட்ட அபிவிருத்திகளை எனது ஐந்து வருட ஆட்சியில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் முன்னெடுத்திருந்தேன் - என்றார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த மாநாட்டில், தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, பற்றிக் கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, சூரிய சக்தி காற்று மற்றும் நீர் மின் உற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேன் ராகவன், சாந்த பண்டார உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

என்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடளாவிய ரீதியில் மிகப் பெரிய அளவில் கையெழுத்துக்களைச் சேகரித்து வருகின்றனர். இதில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் கையொப்பமிட்டுள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்டம் மிக மோசமானது. அதில் திருத்தங்களை மேற்கொள்வதால் பயனில்லை. அந்தச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும். மக்களின் உரிமைகளை - சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாக்கும் வகையில் இந்தக் கருமம் ஆற்றப்பட வேண்டும் - என்றார்.

## வடக்கு மாகாணத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஒன்றைக் கூறிவைக்க விரும்புகின்றேன். 2015 ஜனாதிபதித் தேர்தலில் என்னை வெல்ல வைப்பதற்கு வடக்கு மாகாண மக்கள் அனைவரும் வாக்களித்தார்கள். அந்த நன்றிக் கடனுக்காகவே நான் எனது ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணம் மற்றும் வட பகுதிக்கு அதிக தடவைகள் வருகை தந்து பல்வேறுபட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுத்திருந்தேன்.

அந்த நன்றிக் கடனை நான் என்றும் மறக்கமாட்டேன். வடக்கு மாகாணத் தமிழ் மக்களுக்கு எனது நன்றிக் கடன் என்றும் இருக்கும்.

எமது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனைப் பலப்படுத்துவதன் மூலம் இந்த மாவட்டத்தில் நல்லிணக்கம், சமாதான நிலைமையை முன்னெடுத்து முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் - என்றார்.

## பாடசாலை மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பெற்றுக்கொண்ட மாணவர்கள் இன்று முதல் தமது இரண்டாவது தடுப்பூசியைத் தமது பிரதேசங்களில் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கும் இன்று இரண்டாம் கட்டத் தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பமாகின்றன என்று நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் குறித்த பிரிவுக்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## நாடளாவிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாடளாவிய ரீதியில் ஒரு மணி நேரம் சுழற்சி முறையில் மின்சாரம் துண்டிக்கப்படும் என ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க அறிவித்துள்ளார்.

இதேவேளை, தென் மாகாணத்தில் இன்று காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை 3 மணி நேர மின் வெட்டு அமுல்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பழிவாங்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி மேற்கொள்ளப்படும் கையெழுத்துச் சேகரிப்பில் தனது ஒப்பந்தத்தை வைத்தது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டுக்கு எதிராக - மக்களுக்கு எதிராக பயங்கரவாதச் செயலில் ஈடுபடுவோரைத் தண்டிக்கவே பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால், ராஜபக்ஷக்களின் ஆட்சியில் சிறுபான்மை மக்களை அடக்குவதற்கே இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டது - பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்போதைய ஆட்சிக்காலத்தில் அரசை விமர்சிப்போரை பழிவாங்கும் வகையிலும் இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுவதை நாம் காண்கின்றோம்.

குற்றவாளிகளைத் தப்பிக்கவிட்டு அப்பாவிகளைச் சிறையிலிடுவதற்கும் தற்போது ராஜபக்ஷக்களுக்கு இந்தச் சட்டம் துணைபோகின்றது. எனவே, இவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது.

தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் அல்லது தற்போதைய காலத்துக்கு ஏற்றவாறு அது முழுவதுமாகத் திருத்தியமைக்கப்பட வேண்டும் - என்றார்.

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட கட்சியின் முக்கிய உறுப்பினர்கள், வடக்கு, கிழக்கு மாவட்டங்களின் பிரதேச சபை உறுப்பினர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் கட்சியின் தொண்டர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் கட்சிக் கொடி கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தால் ஏற்றிவைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. அகவணக்கத்தைத் தொடர்ந்து நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது 2022ஆம் ஆண்டுக்கான கட்சியின் கொள்கைப் பிரகடனம் கட்சியின் செயற்பாட்டாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நாணய நிதியமே சரணம்!

நாடு எதிர்நோக்கும் மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுப்பது தொடர்பில் அரசுத் தலைமை உறுதியான நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை, 'அன்றாடம் காய்ச்சி' நிலையில், அவ்வப்போது நாடுகளிடம் கடன்களை வாங்கிக் காலத்தைக் கழிக்கும் போக்கையே அது தொடருகின்றது என்ற ஆதங்கமே இந்த வார இறுதிப் பத்திரிகைகள் பலவற்றில் கருத்துத் தெறிப்பாக இருந்தது.

இந்தியா, சீனா, வங்காளதேசம் என்று அவசரத் துக்குக் கடன் வாங்கும் திட்டம்தான் கட்டவிழ்கின்றது. முழுமையாகப் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்து மீளுவதற்கான உத்தேசம் ஏதும் அரசுக்கு இருப்பதாகத் தெரியவில்லை என்றே கொழும்பு விமர்சகர்கள் பலரும் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்த நெருக்கடியிலிருந்து மீளுவதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடைவதே ஒரே மார்க்கம், அவர்கள் விதிக்கும் நிபந்தனைகள், வழிகாட்டல்கள் கடுமையானவையாக இருந்தாலும் அவற்றைப் பின்பற்றியாவது, நெருக்கடிகளை எதிர்கொள்ளாவிட்டால், நாடு முழு வங்குறோத்து நிலையை அடைந்து, தோற்றுப் போன – தீண்டத்தகாத – நாடாகி விடுவது தடுக்க முடியாமல் போய்விடும், ஆகவே நேரத்துடன் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவதே புத்திசாலித்தனம் என்கின்றன சில விடயமறிந்த வட்டாரங்கள். முன்னாள் பிரதமரும், இத்தகைய பொருளாதார விடயங்களைக் கையாளும் அனுபவம் கொண்டவருமான ரணில் விக்கிரமசிங்கவும் இந்தக் கருத்தை வலியுறுத்துகின்றார்.

ஆனால், இலங்கையின் இன்றைய பொருளாதார நிலைமைகளைக் கையாளும் விடயத்தில் முக்கிய மானவரான மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் அதனை எதிர்க்கின்றார்.

சர்வதேச நாணய நிதியம் விதிக்கும் கட்டுப்பாடுகள், நிபந்தனைகளை, நாமே விதித்து, நடைமுறைப்படுத்தி, முன்னெடுத்துத் தீர்வு காணலாம் என்கின்றார் அவர்.

நல்லது. சர்வதேச நாணய நிதியம் முற்கடனாக வழங்கி, இலங்கையின் பொருளாதாரச் சுமைக்கு கொடுக்கும் பிணையை, அந்த அமைப்பை விட்டால் வேறு யார் தருவார்கள் என்ற கேள்விக்கு மத்திய வங்கி ஆளுநர் கப்ராலிடம் தெளிவான பதில் இல்லை.

சர்வதேச நாணய நிதியிடம் சரணடைவதா என்ற சர்ச்சைக்குத் திட்டவட்டமான – தெளிவான – பதிலைத் தராமல் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் நழுவுகின்றார். ஒரு நாள், சர்வதேச நாணய நிதியத்திடம் போவோம் என்கின்றார். இன்னொரு நாள், நிதியத்துடன் அது குறித்துப் பேசுகின்றோம் என்கின்றார். விரைவில் முடிவு என்று மற்றொரு நாள் கூறுகின்றார்.

நமது நாட்டின் இந்தத் திருக்கூத்து எல்லாவற்றையும் சத்தமின்றி அவதானித்து நிற்கின்றது நாணய நிதியம். அதேசமயம் நாட்டின் நிதி நிலைமைகள், நிதி விவகாரங்கள் கையாளப்படும் முறைமைகள், குளறுபடிகள் போன்றவை குறித்தும் அதன் அதிகாரிகள், நிர்வாகிகள் கவனித்து வருகின்றனர் என்று தகவல்கள் கூறுகின்றன.

பெரும்பாலும் இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் நாட்டின் பொருளாதாரத் தலைவிதி குறித்து தீர்க்கமான முடிவு எட்டப்படும் என்று சில தரப்புகள் எதிர்பார்க்கின்றன.

மாற்று வழி ஏதும் இல்லாதமையால் சர்வதேச நாணய நிதியத்திடம் சரண் புகுவது என்ற முடிவுக்கு அமைச்சரவை வருமானால், நாணய நிதியம் விதிக்கப்போகும் கடுமையான ஏற்பாடுகளுக்கு நாடும், அரசும், மக்களும் இணங்க வேண்டியிருக்கும். அதற்கு மக்கள் தயாரா என்பதுதான் பிரதான கேள்வி.

## கைத்தொழில் துறையினருக்குத் தேவையான மூலப்பொருள்களை இறக்குமதிசெய்ய திட்டம்!

### அமைச்சர் விமல் தெரிவிப்பு



கைத்தொழில் துறையினருக்குத் தேவையான மூலப்பொருள்களை விரைவில் இறக்குமதி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளன என கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது நிலவும் அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக இலங்கைக்கான தொழில்துறை இறக்குமதிகளை மேற்கொள்வதில் குறிப்பிடத்தக்க சிரமங்கள் ஏற்பட்டுள்ளன என சுட்டிக்காட்டிய அமைச்சர், இந்த விடயம் தொடர்பாக அமைச்சரவை உறுப்பினர்களுடன் கலந்துரையாடினேன் எனக் குறிப்பிட்டார்.

எனவே, எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு தொழில்துறையினருக்குத் தேவையான மூலப்பொருள்கள் அடங்கிய அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தேன் என அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், சீனா போன்ற மற்றுமொரு தேசத்துடன் கலந்துரையாடி, மூலப்பொருள்களை பெற்றுக்கொள்வதற்கு விசேட கடன்வரிசையை இலங்கை உருவாக்க முடியும் எனவும் அமைச்சர் வீரவன்ஸ தெரிவித்தார்.

எதிர்காலத்தில் சீனத் தூதுவருடன் கலந்துரையாடி உடன்பாடு எட்டப்படும் என நம்புகிறேன் எனவும், வெற்றிபெற்றால் மூலப்பொருள் நெருக்கடிக்கு விடை கிடைக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 'ஒரே நாடு - ஒரே சட்டம்' முயற்சி பாராட்டுக்குரியது!

### பல்கலைக்கழக பேராசிரியர்கள் கருத்து

உலகில் வேறு எங்கும் நடைமுறைப் படுத்தப்படாத கருப்பொருளின் அடிப்படையில் நாட்டில் பொதுச் சட்டத்தை நிறுவுவதற்கான அடித் தளத்தை அமைப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சியை பல்கலைக் கழக பேராசிரியர்கள் குழு பாராட்டியுள்ளது.

பல்கலைக்கழக சமூகத்தின் கருத்துக்களையும் திரட்டுவதற்காக கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற 'ஒரே நாடு - ஒரே சட்டம்' என்ற ஜனாதிபதி செயலணியின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பல்கலைக் கழக பேராசிரியர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

கொழும்பு, ருகுணு, ஜயவர்தனபுர, யாழ்ப்பாணம், தென்கிழக்கு, பேராதனை, களனி, ரஜரட்டை, வயம்ப உள்ளிட்ட 18 பல்கலைக் கழகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல்கலைக்கழக வேந்தர்கள், வைத்தியர்கள், பேராசிரியர்கள், அறிஞர்கள் உள்ளிட்ட குழு வினர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## யாழ்.ஆயருடன் மைத்திரி பேச்சு



(இ.கலையமுதன். எஸ்.நிதர்ஷன்)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சமகால நிலவரம் தொடர்பாக யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்று யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான விஜயத்தை மேற்கொண்ட முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டிருந்த நிலையில் பிற்பகல் யாழ்.மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் ஆயரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இராஜாங்க அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர மற்றும் துமிந்த திஸாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன் மற்றும் சுரேன் ராகவன் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர்.

அதற்கு முன்னதாக மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள பெரிய மொஹிதீன் ஜும்மா பள்ளிவாசலுக்குச் சென்ற மைத்திரிபால சிறிசேன, பள்ளிவாசல் நிர்வாகத்தினருடன் கலந்துரையாடியதுடன் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

## அராலியில் இடம்பெற்ற விபத்தினால் ஒருவர் வைத்தியசாலையில் சேர்ப்பு

வட்டுக்கோட்டை - அராலி, யாழ்ப்பாண கல்லூரி மைதானத்திற்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் இளைஞரொருவர் படுகாயமடைந்துள்ளார். மூளாய் பகுதியைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

மாட்டு வண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இந்த விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையின் சட்டமா அதிபர் தொடர்பில் ஐ.நா. அதிருப்தி!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் 17 பக்க அறிக்கையில் இலங்கை மீது மேலும் பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இதில், முதன் முறையாக சட்ட மா அதிபர் சுதந்திரமாகச் செயற்படவேண்டும் என்ற குற்றச்சாட்டும் அடங்குகிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் மீது 855 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டபோதிலும் அவை நிரூபிக்கப்படாமல், அவர்களை கொழும்பு மேல் நீதிமன்றம் விடுவித்தநிலையில் இந்த சர்வதேச குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை மீதான இந்த மேலதிக குற்றச்சாட்டுக்கள், எதிர்வரும் மார்ச் 3 ஆம் திகதி மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத் தொடரில் விவாதிக்கப்படவுள்ளன. கடந்த திங்கட்கிழமை ஐக்கிய நாடுகள் சபையின் ஊடாகக் கொழும்பில் உள்ள வெளியுறவு அமைச்சுக்கு அனுப்பப்பட்ட இந்த அறிக்கை, இலங்கையின் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டது.

இதனையடுத்து அவர்கள், அரசாங்கத்தின் அவதானிப்புகள் மற்றும் விளக்கங்களை ஜெனிவாவிற்கு அனுப்பியுள்ளனர்.

கடந்த ஆண்டு அறிக்கையுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டும் சர்வதேச தரத்திற்கு ஏற்ப பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் மாற்றங்களைச் செய்ய அரசாங்கம் தவறியமையை விரிவாக அந்த அறிக்கை ஆராய்ந்துள்ளது.



தற்போது நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் பேரவை மகிழ்ச்சியடையவில்லை என தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

எனவே இது ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் முன்னுரிமை வரி வசதியை மோசமாகப் பாதிக்கலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில், 2019 உயிர்த்த ஞாயிறு படுகொலைகள் பற்றிய குறிப்புகள் உள்ளன.

இது கர்தினால் மெல்கம் ரஞ்சித் முயற்சியின் விளைவாக இலங்கை அரசாங்கம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டாக அமைந்துள்ளது.

2022,பெப்ரவரி 28 ஆம் திகதி ஆரம்பமாகும் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வுகளில் வாக்கெடுப்பு இடம்பெறாது.

எனினும், இந்த ஆண்டு செப்ரெம்பரில் இலங்கை தொடர்பான மற்றொரு தீர்மானத்துக்கு முன்னோடியாக இந்த அமர்வு அமைந்துள்ளது.

# ‘சௌபாக்யா’ கலாசார நிகழ்ச்சிகளை பார்வையிட ஜனாதிபதி, பிரதமர் வருகை!

’சௌபாக்யா’ கலாசாரக் கலை நிகழ்ச்சி மற்றும் கண்காட்சியைப் பார்வையிடுவதற்காக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் வருகை தந்தனர்.

இலங்கையின் பெருமிதம் மற்றும் கலாசார அடையாளத்தைப் பாதுகாத்தல், வெளிநாட்டுத் தொடர்புகளைப் பலப்படுத்துதல், தனித்துவமான இடங்களை மேம்படுத்துதல் மற்றும் கலாசார பாரம்பரியத்தை எதிர்காலச் சந்ததியினருக்கு எடுத்துச் செல்லும் நோக்கத்துடன், புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, தேசிய பாரம்பரிய கலை மற்றும் கிராமியக் கலை விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சு மற்றும் அவற்றோடு ஒன்றிணைந்த நிறுவனங்கள் இணைந்து, இந்தக் கலாசாரக் கலை நிகழ்ச்சி மற்றும் கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தன.

இராஜதந்திரப் பிரதிநிதிகளின் பங்கேற்புடனான இந்தக் கலாசாரக் கலை நிகழ்ச்சி, தாமரைத் தடாகம் மஹிந்த ராஜபக்ஷ மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

இலங்கை, இதுவரையில் 48 நாடுகளுடனான கலாசார ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் 48 இல் கைச்சாத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கலாசார அமைச்சுக்குரிய நிறுவனங்கள், மத்திய நிலையங்கள் மற்று ஜனகலா கேந்திர நிலையத்தில் நடனம் பயிலும் மாணவ, மாணவியரின் நடன நிகழ்ச்சிகளும் இதன்போது அரங்கேற்றப்பட்டன.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அமைச்சர்கள், கலாசார விடயங்களுக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மற்றும் இராஜாங்க அமைச்சர்கள், தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், ஜனாதிபதியின் செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# கொழும்பில் பெண்களிடம் சங்கிலி பறித்தவர் கைது!

கொழும்பில் வீதியில் பயணித்த பல பெண்களின் தங்கச் சங்கிலிகளை பறித்து அச்சத்தை ஏற்படுத்திய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மிரிஹான, உடஹமுல்ல பிரதேசத்தில் பல பகுதிகளில் பெண்களிடம் தங்க நகைகளை திருடிய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுகேகொட பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் கொள்ளைச் சம்பவத்துக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இவர் படல்கம பிரதேசத்தில் வசிக்கும் 32 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில், கிரிபத்கொட மற்றும் ராகம பிரதேசத்தில் இரண்டு பெண்களிடம் தங்க நகைகளைத் திருடியுள்ளார் எனத் தெரியவந்துள்ளது. சந்தேகநபர் மஹர நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

# ஈஸ்டர் தொடர்பில் வழங்கப்பட்ட சாட்சியங்களை சட்டமா அதிபரும் அரசும் மறைத்ததாக சாடல்!



ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்குமென்ற நம்பிக்கை நாளுக்கு நாள் வலுவிழந்து செல்வதாக கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை கவலை வெளியிட்டுள்ளார்.

‘தித்த’ எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு பண்டாரநாயக்க ஞாபகார்ந்த மாநாட்டு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்தநிலையில் மேற்படி நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை இவ்வாறு கவலை வெளியிட்டுள்ளார்.

சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியவர்களும் செயற்படுத்த வேண்டிய பொறிமுறைகளும் பிரச்சினைக்குரியனவாக மாறியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆணைக்குழுவில் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் வழங்கப்பட்ட சாட்சியங்களை அரசாங்கமும் சட்டமா அதிபரும் மறைத்துள்ளனர் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவற்றைக் கேட்டு கடிதங்களை அனுப்பிய போதும், தமது கோரிக்கை கவனத்திற்கொள்ளப்படவில்லை எனவும் பேராயர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில நபர்கள் தாக்குதல் தொடர்பாக அறிந்திருந்தும் அது தொடர்பில் எதனையும் செய்யவில்லை என்பதால், அவர்களுக்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கை எடுக்குமாறு ஆணைக் குழுவின் அறிக்கையில் கோரியுள்ள போதிலும் சட்டமா அதிபர் மற்றும் அவரின் திணைக்களத்தின் தவறான செயற்பாடுகள் காரணமாக நீதி வழங்கப்படாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் தமக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றவில்லை எனவும் கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை கவலை வெளியிட்டுள்ளார்.

# வெளிநாட்டு சுற்றுலாப் பயணி இலங்கையில் மரணமடைவு!

பதுளை எல்ல பிரதேசத்தில் சுற்றுலா விடுதி ஒன்றின் இரண்டாவது மாடியில் இருந்து வீழ்ந்து வெளிநாட்டு சுற்றுலா பயணி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விடுதியின் இரண்டாவது மாடியில் இருந்து தவறி விழுந்த பயணி, தெமோதர பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

28 வயதான குறித்த நபர் செவ்வாய்க்கிழமை இரவு விடுதியில் இருந்த போது கீழே விழுந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

# இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் தமிழ் உள்ளிட்ட மும்மொழிகளில் காணொலி



இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தமிழ் உள்ளிட்ட மும்மொழிகளில் காணொலியொன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் இலங்கைக்கான தனது விஜயம் தொடர்பிலும், தன்னைப்பற்றியும் பகிர்ந்துள்ளார். அந்தக் காணொலியில் அமெரிக்கத் தூதுவர் கூறும் விடயங்கள் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையுடன், வணக்கம் மற்றும் ரொம்ப நன்றி உள்ளிட்ட தமிழ் வார்த்தைகளையும் உச்சரித்துள்ளார்.

# குழந்தை பால் போத்தல்கள், உணவுதட்டுகளில் புற்றுநோயை உண்டாக்கும் இரசாயன பதார்த்தம்!

குழந்தைகளுக்கான பால் மற்றும் ஏனைய உணவுகள் வழங்கப்படும் போத்தல்கள் மற்றும் உணவுத் தட்டுகளில் பிஸ்பினோல் எனப்படும் புற்றுநோயை உண்டாக்கும் இரசாயனம் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் நீதிக்கான கேந்திரம் ஒத்துழைப்பில், தேசிய ஊழல் ஒழிப்பு வலையமைப்பால் மேற்கொள்ளப்பட்ட புதிய ஆய்வில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுக்காக இலங்கை, பங்களாதேஷ், சீனா, பூட்டான், மலேசியா, இந்தோனேஷியா, ரஷ்யா மற்றும் தன்சானியா ஆகிய நாடுகளில் இந்த பால் போத்தல்கள் மற்றும் உணவுத் தட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தற்போது ஐரோப்பிய சங்கத்தின் உறுப்பு நாடுகளிலும், மலேசியா, சீனா மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளிலும் குழந்தைகளுக்கான உணவு பாத்திரங்களில் குறித்த இரசாயனங்களை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையில் பெறப்பட்ட மாதிரிகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குறித்த பிஸ்பினோல் என்ற புற்றுநோய் உண்டாக்கும் இரசாயனம் உயர் மட்டத்தில் அடங்கியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும், அவை தொடர்ந்தும் பாவனையில் உள்ளன என சுற்றுச்சூழல் நீதிக்கான கேந்திர நிலையத்தின் வேலைத்திட்ட ஒருங்கிணைப்பாளர் சலனி ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாதத் தடைச் சட்டம் இருப்பது பிரச்சினையில்லை!

## சுரேன் ராகவன் எம்.பி. கூறுகிறார்



பயங்கரவாதம் முற்றாக அழிக்கப்பட்டு விட்டதாக சமுதாயம் ஏற்றுக் கொள்ளுமாயின் அந்த சட்டத்தை நாங்கள் முற்றாக நீக்க வேண்டும். எனினும், 2019 ஆம் ஆண்டு பயங்கரவாதம் மீண்டும் தலை தூக்கியது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றது. ஆகவே, பயங்கரவாதத்துக்கு எதிராக நாட்டில் சட்டங்கள் இருக்கின்றமை பிரச்சினையல்ல. பயங்கரவாத சட்டத்தின் மூலம் அதிக நேரங்களில் அநீதி நடந்திருக்கின்றது என்பதை தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களும் சர்வதேசமும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன என நாடாளுமன்ற உறுப்பினரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னித் தொகுதித் தலைவருமான கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகவியலாளரின் கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையில் இருந்த கஷ்டமான ஒரு நிலையில் பயங்கரவாதச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதன் அடிப்படையில் பயங்கரவாதத்துக்கு எதிராக அது பயன்படுத்தப்பட்டுள்ளது. எனினும் அதிக நேரங்களில் அநீதி நடந்திருக்கின்றது என்பதைத் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களும் சர்வதேசமும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன.

பயங்கரவாதம் முற்றாக அழிக்கப்பட்டு விட்டதாக சமுதாயம் ஏற்றுக் கொள்ளுமாயின் அந்த சட்டத்தை நாங்கள் முற்றாக நீக்க வேண்டும். எனினும், 2019 ஆம் ஆண்டு பயங்கரவாதம் மீண்டும் தலை தூக்கியது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றது. ஆகவே, பயங்கரவாதத்துக்கு எதிராக நாட்டில் சட்டங்கள் இருக்கின்றமை பிரச்சினையல்ல.

ஆனால் அந்த சட்டங்கள் சாதாரண மக்களை பாதிக்காத வகையில் இருக்க வேண்டும். ஆகையால், அந்த சட்டத்தை சீர்திருத்தி நாட்டின் இறைமையை சரியான விதத்தில் பாதுகாத்துக் கொண்டு, இலங்கையில் மத ரீதியான, இன ரீதியான பயங்கரவாதம் இருக்குமாயின் அதற்கு எதிராக அதனைப் பயன்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.

இதற்கு சமாந்தரமாக இருக்கின்ற சர்வதேச சட்டங்களைப் பரிசீலித்து இலங்கையின் பாதுகாப்புக்கும், மக்களின் பாதுகப்புக்கும் ஏற்ற வகையில் பயங்கரவாதத் சட்டத்தை அமைக்க வேண்டும் என்பது தான் எனது கருத்தாகவுள்ளது. - எனத் தெரிவித்தார்.

# வவுனியாவில் நெசவு பயிற்சி நிலையங்களுக்கு இராஜங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர விஜயம்!

*வவுனியா, பெப். 21*

*வடமாகாண தொழிற்துறை திணைக்களத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள நெசவு பயிற்சி நிலையங்கள் மற்றும் கைத்தறி நெசவு உற்பத்தி விற்பனை நிலையங்களிற்கு கைத்தறி நெசவு மற்றும் உள்நாட்டு ஆடைகள் உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர நேற்று முன்தினம் சனிக்கிழமை விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.*

*இதன் போது வேப்பங்குளம், அம்பலங்கொடல்ல ஆகிய பிரதேசங்களில் உள்ள நெசவு பயிற்சி நிலையம் மற்றும் வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள கைத்தறி நெசவு உற்பத்தி விற்பனை நிலையங்களிற்கு சென்று அவற்றின் செயற்பாடுகள் தொடர்பாக பார்வையிட்டிருந்தார். அத்தோடு அங்கு நிலவுகின்ற குறைபாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடியிருந்தார்.*

*மேலும் நெசவு உற்பத்தியில் சிறப்பாக செயற்பட்டு வரும் 05 பேருக்கு அமைச்சின் ஊடாக மூலப்பொருள்கள் வழங்கி வைத்தமையுடன், இரு பயிற்சி நிலையங்களுக்கும் கைத்தறிகளும் வழங்கி வைத்திருந்தார். இதன் போது மரக்கன்று ஒன்றை அமைச்சரால் நாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.*

*மாவட்ட தொழிற்துறை உத்தியோகத்தர் சு.ஜெயபாலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கைத்தறி நெசவு மற்றும் உள்நாட்டு ஆடைகள் உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, வவுனியா மாவட்ட சுதந்திரக்கட்சியின் இணைப்பாளர் வாசல, தொழிற்துறை திணைக்கள உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.*

# உடபுஸ்ஸலாவ நகரில் தீ 5 கடைகள் எரிந்து நாசம்





உடபுஸ்ஸலாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடபுஸ்ஸலாவ நகரத்தில் சனிக்கிழமை மாலை ஏற்பட்ட தீ விபத்து காரணமாக 5 கடைகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

இந்தத் தீ விபத்தில் எவருக்கும் உயிராபத்தோ, காயங்களோ ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் பொருள்கள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

இந்த தீ விபத்தில் புடைவைக் கடைகளும் பிளாஸ்டிக் கடைகளும் பெருமளவில் அடங்குகின்றன எனவும் இதனால் ஏற்பட்ட சொத்து இழப்பு பல லட்சங்களைக் கடந்துள்ளதாகவும் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தீ பற்றிய நேரத்தில் வேகமான காற்றும் வீசியதாலேயே இந்தக் கடைத் தொகுதி விரைவாக பற்றி எரிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாரும் பொது மக்களும் தீயணைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் தீயை விரைவாக கட்டுப்படுத்த முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கடைகள் அனைத்தும் தகரக் கொட்டில்களாலேயே அமைக்கப்பட்டிருந்தன. இதனாலேயே, தீ வேகமாகப் பரவியுள்ளதாக உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

தீ ஏற்பட்டதற்கான காரணம் கண்டறியப்படவில்லை என்றும் யாராவது தீ வைத்திருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

ஏற்பட்ட தீ காரணம் தொடர்பாகவும், சேதவிவரங்கள் தொடர்பாகவும் உடபுஸ்ஸலாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 10 அடி பள்ளத்தில் பாய்ந்தது வான் மஸ்கெலியாவில் விபத்து சம்பவம்!

## ஐவர் படுகாயம்



மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மஸ்கெலியா - சாமிமலை பிரதான வீதியில் பாக்ரோ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

வான் ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 10 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணித்த 5 பேர் கடும் காயங்களுக்குள்ளாகி டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தறை கோட்டேகொட பகுதியிலிருந்து சிவனொளிபாதமலை யாத்திரையை மேற்கொண்டு, மீண்டும் வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தபோதே வான் இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

மாத்தறை கோட்டேகொட பகுதிகளை சேர்ந்தவர்களே இந்த விபத்தில் சிக்கியுள்ளனர்.

வானில் 12 பேர் பயணித்துள்ளனர் எனவும் இதில் சாரதி உட்பட 5 பேர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளதோடு ஏனையோர் சிறு காயங்களுடன் தப்பியுள்ளனர்.

வாகன சாரதிக்கு வாகனத்தை கட்டுப்படுத்த முடியாததன் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மின்சாரம் மற்றும் எரிபொருள்களை சிக்கனமாக பயன்படுத்த கோரிக்கை

மின்சாரம் மற்றும் எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்துமாறு அனைத்து அரச நிறுவனங்களுக்கும் பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவுறுத்தல்களை விடுத்துள்ளது.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின்வேண்டுகோளின் பேரில் இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ரத்னசிறி ஊடகமொன்றுக்குத் தெரிவித்தார்.

அதன்படி, குளிரூட்டிகள் மற்றும் தேவையற்ற விளக்குகள் நிறுவனங்களின் பயன்பாட்டை முடிந்த வரை குறைக்குமாறு அரச நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், அத்தியாவசியமற்ற பயணங்களுக்கு எரிபொருளைப் பயன்படுத்த வேண்டாம் என அரச நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

கலந்துரையாடல்கள் மற்றும் கருத்தரங்குகளுக்கு வெளிமாவட்டங்களிலிருந்து அதிகாரிகளை கொழும்புக்கு வரவழைப்பதற்காக அரசாங்க வாகனங்களைப் பயன்படுத்துவது ஏற்கனவே கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக ரத்னசிறி மேலும் குறிப்பிட்டார்.

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள மூவரின் உடனடி விடுதலையைக் கோருகின்றது மன்னிப்புச் சபை

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள டிவானியா முகுந்தன், மொஹமட் இம்ரான் மற்றும் செல்வநாயகம் சசிகரன் ஆகியோரை உடனடியாக விடுதலை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துடன் தொடர்புடைய வகையில் அரசாங்கத்தினால் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டிய 7 பரிந்துரைகளை உள்ளடக்கிய புதிய அறிக்கையொன்றையும் சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ளது.

அரசாங்கம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரயோகத்தை உடனடியாக நிறுத்தவேண்டும் எனவும், அச்சட்டத்தை முழுமையாக இல்லாதொழிக்கவேண்டும் எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

கிளிநொச்சியைச் சேர்ந்த 34 வயதான டிவானியா முகுந்தன் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த 2021 மார்ச் மாதம் 29ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு இன்னமும் வழக்குப்பதிவு செய்யப்படாமல் 10 மாதங்களுக்கும் அதிகமான காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, காத்தான்குடியைச் சேர்ந்த 23 வயதான மொஹமட் இமாம் மொஹமட் இம்ரான், கடந்த 2019 மே மாதம் 9ஆம் திகதி விசாரணைகளுக்கென கைதுசெய்யப்பட்டு எவ்வித குற்றச்சாட்டுக்களுமின்றி இரண்டரை வருடங்களுக்கும் அதிகமான காலம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேலும், கிளிநொச்சியைச் சேர்ந்த 28 வயதான செல்வநாயகம் சசிகரன், கடந்த 2020 மே மாதம் 5 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு இன்னமும் வழக்குப்பதிவு செய்யப்படாமல் ஒன்றரை வருடங்களுக்கும் அதிகமான காலம் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் குறித்த மூவரது குடும்பத்தினர் முகங்கொடுத்திருக்கக்கூடிய சிக்கல்கள், பிணைக்கோரிக்கையை முன்வைப்பதற்கான வாய்ப்பு, பொருளாதார ரீதியில் அவர்கள் எதிர்கொண்டிருக்கும் தாக்கங்கள் என்பன தொடர்பிலும் மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள விரிவான அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எவ்வித குற்றச்சாட்டுக்களுமின்றி நபரொருவரை நீண்டகாலத்திற்குத் தடுத்து வைப்பதற்கான வாய்ப்பை வழங்கக்கூடிய இச்சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சுமையை இலங்கையர்கள், குறிப்பாக சிறுபான்மையினத்தவர்கள் தற்போதும் தாங்கிக்கொண்டிருக்கின்றனர்.

பயங்கரவாத தடுப்புச் சட்டமானது சர்வதேச சட்டங்கள் மற்றும் நியமங்களுக்கு அமைவாகத் திருத்தியமைக்கப்படும் என்று அரசாங்கம் பல்வேறு தடவைகள் வாக்குறுதி வழங்கியிருந்தாலும், தற்போது வரை அச்சட்டத்தில் உரியவாறான திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்திருத்த முன்மொழிவுகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த ஜனவரி மாதம் 4 ஆம் திகதி அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டது.

இருப்பினும் இந்தத் திருத்த முன்மொழிவுகள் அச்சட்டத்தில் காணப்படும் முக்கிய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குத் தவறிவிட்டன என்று நாம் கருதுகின்றோம். ஆகவே பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை சர்வதேச நியமங்களுக்கு அமைவாக மாற்றியமைப்பதற்கு இந்தத் திருத்தங்கள் போதுமானவை யல்ல.

ஆகவே பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள டிவானியா முகுந்தன், மொஹமட் இம்ரான் மற்றும் செல்வநாயகம் சசிகரன் ஆகியோரை உடனடியாக விடுதலை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இல்லாவிட்டால் அவர்கள் குற்றம் புரிந்தமைக்கான நம்பத்தகுந்த ஆதாரங்கள் காணப்படும்பட்சத்தில், அவர்களுக்கு எதிராக உரியவாறு வழக்கு தாக்கல் செய்து, சர்வதேச நியமங்களுக்கு அமைவாக நீதிமன்றத்தின் ஊடாக விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் மேற்கொள்வதற்கென முன்மொழியப்படும் எந்தவொரு திருத்தமும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் பிரகாரம் அச்சட்டம்கொண்டிருக்கக்கூடிய கடப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் வகையில் அமைய வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை அதன் அறிக்கையின் ஊடாக அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

# எனக்கு இறுதிமூச்சு இருக்கும்வரை மக்களுக்கான பணிகள் தொடரும்!

## திகாம்பரம் எம்.பி. திட்டவட்டம்




மலையக மக்களுக்கு சேவையாற்றவே நான் அரசியலுக்கு வந்தேன். இறுதிமூச்சு இருக்கும்வரை மக்களுக்கான எனது பணி தொடரும். மலையக பெருந்தோட்ட மக்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான பழனி திகாம்பரத்தின் அமைச்சின் காலகட்டத்தில் ஹற்றன் மல்லியப்பு புருட்ஹில் பகுதியில் ஏற்படுத்தப்பட்ட புதிய வீடமைப்பு திட்டத்துக்கான மின்சாரம் மற்றும் குடிதண்ணீர் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

மகிழ்ச்சி இல்லம் அமைப்பின் நிதி பங்களிப்பில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் திறப்பு விழா நிகழ்வில் பிரதம அதிதியாக பழனி திகாம்பரம், சிறப்பு அதிதியாக மயில்வாகனம் உதயகுமார், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர்களான சோ.ஸ்ரீதரன், முத்தையா ராம், மகிழ்ச்சி இல்லத்தின் முகாமையாளர் பாஸ்டர் பெருமாள் ரவீந்திரன் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதில் கலந்து கொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

உண்மையைப் பேச வேண்டும், உண்மையாக இருக்க வேண்டும், உண்மையாக வாழ வேண்டும் என்பதே எமது பழக்கம். அந்தவகையில் மலையக மக்களுக்கு எதையாவது செய்ய வேண்டும் என்ற நோக்கில்தான் அரசியலுக்கு வந்தேன். மாறாக இருப்பவற்றை சுருட்டிக்கொண்டு செல்வதற்கு அல்ல.

எமது பெருந்தோட்ட மக்களை ஒரு சில அரசியல் தலைமைகள் லயத்தில்தான் வாழ வைத்தனர். ஆனால் எனக்கு அமைச்சு பதவி கிடைக்கப்பெற்று குறுகிய காலப்பகுதியிலேயே தனி வீடுகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இன்றளவிலும் அந்தத் திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. அமைச்சு பதவியை சரியாக பயன்படுத்தி, மக்களுக்கு சேவை செய்தேன். அதனால்தான் புதிய சின்னத்தில் போட்டியிட்ட போதும்கூட 83 ஆயிரம் மக்கள் எனக்கு வாக்களித்தனர். இனியும் எனது உயிர் இருக்கும்வரை மக்களுக்கு சேவை செய்வேன்.

நாட்டிலே தற்போது பொருளாதாரப் பிரச்சினைகள் தலைவிரித்தாடுகின்றன. இதற்கு கொரோனா மட்டும் காரணம் அல்ல. இந்த அரசின் முறையற்ற தீர்மானங்களே பிரதான காரணங்களாகும். எனவே, நாட்டுக்கும், எமது மலையக மக்களுக்கும் நன்மை பயக்க வேண்டுமானால் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி வரவேண்டும். சஜித் தலைமையிலான அமைச்சரவையில் நானும் அமைச்சராக இருப்பேன். எமது மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார்.

# 45 அடி ஆழமான குழியில் விழுந்தார் பெண் ஒருவர்!

## அம்பேகமவில் சம்பவம்



அம்பேகம பிரதேசத்தில் சுமார் 45 அடி ஆழமான குழியில் பெண் ஒருவர் விழுந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை காலை பத்தேகம பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின்படி அம்பேகம, மிரிஸ்வத்த மலைப் பகுதியில் சுமார் 45 அடி ஆழமான குழியில் பெண் ஒருவர் தவறி விழுந்துள்ளார்.

வெண் ஒருவர் கத்தும் சத்தம் கேட்டதால் அப்பகுதி மக்கள் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர்.

குழிக்குள் சிக்கிய 50 வயது பெண்ணை அப்பகுதி மக்கள் உதவியுடன் பொலிஸார் மீட்டனர்.

மீட்கப்படும் போது பெண் ஆபத்தான நிலையில் இருந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, அவர் சிகிச்சைக்காக காலி கராபிட்டிய வைத்தியசாலைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

மேற்படி பெண் வெள்ளிக்கிழமை குழிக்குள் விழுந்துள்ளார் என சந்தேகிக்கப்படுவதாகவும், இதுவரையில் அவரால் வாக்குமூலம் வழங்க முடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# சர்வதேச முதலீட்டாளர் நம்பிக்கையை வென்றெடுக்கும் நிலையில் மத்தியவங்கி

## ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் பெருமிதம்



இலங்கையில் முதலீடு செய்வதற்கு சர்வதேச முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் நிலையில் இலங்கை தற்போது இருப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

சர்வதேச வர்த்தக தொலைக்காட்சியான ப்ளூம்பெர்க் உடனான உரையாடலில் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.


தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் -

எங்களின் அனைத்து பத்திர ஏலங்களும் தற்போது நிறைவடைந்துள்ளன. வட்டி விகிதங்கள் நடுத்தர மட்டத்தில் உள்ளன. இந்த ஆண்டு நமது பங்குச் சந்தையின் செயல்திறனைப் பார்த்தால், சமீப காலமாக மிகச் சிறந்த செயல்திறனைக் காட்டி வருகிறது. சுற்றுலா பயணிகள் மீண்டும் நாட்டுக்கு வரத் தொடங்கியுள்ளனர். வங்கித் துறையின் பொதுவான நிபந்தனைகளும் நன்றாகவே உள்ளன.

எனவே முதலீட்டாளர்கள் நல்ல நம்பிக்கையுடன் இருக்க முடியும் என்று நினைக்கிறேன். எனவே முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பெற நாம் நிறைய செய்ய வேண்டும் என்று நினைக்கவில்லை. 'நாங்கள் நமது பொருளாதாரத்தில் சில மாற்றங்களைச் செய்து வருகிறோம். குறிப்பாக நமது எரிபொருள் விலை. தற்போது அரசாங்கம் எரிபொருள் விலையை அதிகரித்தமை தொடர்பாகப் பேசப்படுகிறது. ஐ.எம்.எப். வந்தாலும் இந்த மாதிரியான அறிவுரைகள்தான் வழங்கும். இதைத்தான் அரசாங்கம் இப்போது செய்து கொண்டிருக்கிறது. - என்றார்.

# ஆற்றும் ஒவ்வொரு செயலிலும் இலாபம் பெற முயற்சிப்பவர்களே இன்றைய அரசியல்வாதிகள்!

## நீதியரசர் விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



அரசியல்வாதிகள் தாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் அரசியல் இலாபம் பெறவே பார்ப்பார்கள். அதைப் பொருட்படுத்தாமல் அவர்களின் ஒத்தாசையைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் காரியங்களில் கண்ணாயிருங்கள், சாதனைகளில் குறியாக இருங்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகளைப் பேணுங்கள். உங்கள் பிரச்சினையை அவர்களுக்கூடாகத் தீருங்கள்.

– இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஆதரவில் இடம்பெறும் 'பெண்களுக்கான பாதையை உருவாக்குதல் மற்றும் பெண் குடும்பத் தலைவர்களுக்கான மாறிச் செல்லும் வரைவிலக்கணங்களை உருவாக்குதல்' என்ற தலைப்பிலான ஆய்வு ஆவணப் பகிர்வு நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

கடந்த 2020 தொடக்கம் 2022 வரை விழுது நிறுவனத்தால் பெண்கள் தலைமையிலான மனித உரிமை மேம்பாட்டுத் திட்டம் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்று வந்துள்ளதாக அறிகின்றேன். அந்தத் திட்டத்தின் ஊடாக பெண்கள் குழுவினரால் இனம் காணப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஆவணம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் அறிகின்றேன்.

அந்த ஆய்வு ஆவணம் தொடர்பான பகிர்வு நிகழ்வே இது. மற்றும் அடிப்படை உரிமை, மனித உரிமை தொடர்பான பெண்களால் இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்கான பரிந்துரை செயற்பாட்டு நிகழ்வாகவும் இந்தக் கூட்டம் நடைபெறுகின்றது.

பொதுவாக இன்றைய காலகட்டத்தில் பெண்களுக்கு வாழ்வாதாரப் பிரச்சினைகள், வேலைவாய்ப்புப் பிரச்சினைகள், பாதுகாப்புப் பிரச்சினைகள், சமூகமட்டப் பிரச்சினைகள், சுற்றாடல் பிரச்சினைகள் எனப் பல பிரச்சினைகள் இருப்பதை நாம் இனங்காண முடியும்.

இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வென்ன என்பதே உங்கள் அனைவரதும் கேள்வி. ஒரு சாரார் இதற்கான தீர்வு அரசாங்கத்திடம் இருக்கின்றது என்கின்றார்கள். ஆகவே, அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் என்ன, பெண்களுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பான விவரங்கள் என்ன, அரச கொடுப்பனவுகளில் பாரபட்சம் காட்டப்படுகின்றதா, பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு நிரந்தர வாழ்வாதாரத் திட்டங்கள் ஏதேனும் தீட்டப்பட்டு அவற்றுக்கு அரசாங்கம் ஒதுக்கீடுகளை ஒதுக்கியுள்ளதா, இளையோருக்கான திட்டங்கள் என்ன, அவர்களின் வேலை வாய்ப்புக்கான அரசாங்கத்தின் பதில் என்ன என்று பல கேள்விகளை அரசாங்க அலுவலர்கள் முன் வைக்கின்றார்கள்.

அதே சமயம் இன்னொரு சாரார் அரசாங்க உதவிகளை எந்தளவுக்கு எதிர்பார்க்கலாம் என்ற கேள்வியை எழுப்பிவிட்டு வெளிநாட்டு நிதி உதவிகளுடன் 'நம் கையே நமக்குதவி' என்று தற்சார்பு நடவடிக்கைகளில் இறங்கினால்தான் விமோசனம் என்கின்றார்கள். அதாவது அரசாங்கத்தை நம்பியிராமல் எமது பிரச்சினைகளுக்கு நாமே தீர்வு காண வேண்டும் என்கின்றார்கள்.

மேலும் ஒரு சாரார் அரசியற் பலம் இருந்தால் காரியங்களைச் சாதிக்கலாம் என்று கூறுகின்றார்கள். அதன் காரணத்தால் அரசாங்கக் கட்சிகளின் அரசியல்வாதிகளை நாட முற்படுகின்றார்கள்.

இன்னொரு சாரார் எமது பிரச்சினைகள் எமக்கு மட்டுமன்று, நாட்டின் பல்வேறு சமூகங்களில் தலைவிரித்தாடும் பிரச்சினைகளே அவை என்று அடையாளம் காட்டி நாட்டில் பல பாகங்களில் இருக்கும் தனியார்கள், சங்கங்கள், நிறுவனங்களுடன் கைகோர்த்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்று கூறுகின்றார்கள்.

இவை அனைத்துமே பெண்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு மார்க்கங்கள் தான். அரச உதவிகள், தனியார் உதவிகள், வெளிநாட்டு உதவிகள், அரசியல்வாதிகள் ஊடான உதவிகள், நாட்டின் பல்வேறுபட்ட நிறுவனங்களின் ஒன்றுபட்ட தொடர்புப் பரிமாற்றங்களால் ஏற்படக்கூடிய உதவிகள் அனைத்தும் பாதிக்கப்பட்ட எம் பெண்களுக்கான உதவித் தோற்றுவாய்களே.

ஆனால் எந்தளவுக்கு இந்தத் தோற்றுவாய்களை ஒன்றிணைத்து மக்கள் நலம் காணமுடியும் என்பது எமது ஒன்றுபட்ட நடவடிக்கைகளிலும் ஒற்றுமையிலுமே இருக்கின்றது. எமக்கு எம்மேல் நம்பிக்கை ஏற்பட வேண்டும். எம்மால் முடியும் என்ற திடசங்கற்பத்தை நாம் பூண வேண்டும். சேர்ந்து முன்னேற நாங்கள் பிரயத்தனங்கள் எடுக்க வேண்டும்.

இன்று தொழிற்சங்கங்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்று நீங்கள் அனைவரும் அறிவீர்கள். தொழிற்சங்கம் என்பது ஒரே தொழில்சார்ந்த மக்களின் ஒற்றுமைச் சின்னம். உறுப்பினர் எங்கிருந்தாலும் சங்கம் குரல் கொடுக்கும். அதே போன்று பாதிக்கப்பட்ட குடும்பத் தலைவிகள் ஒன்றுபட வேண்டும். ஒரே குரலுடன் அரசாங்கத்தை அணுக வேண்டும்.

அதற்கான முன்னேற்பாடுகள் என்ன என்று பார்த்தோமானால் எமது சகோதரிகள் முதலில் அறிவும், ஆற்றலும், புரிந்துணர்வும் பெற வேண்டும். இந்தத் தேவைப்பாட்டை அறிந்துணர்ந்து தான் சகோதரி சாந்தி,இந்த விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தை உருவாக்கினார். இப்போது நீங்கள் அடுத்த கட்டத்துக்குப் போக ஆயத்தமாக உள்ளீர்கள்.

இனிவரும் காலத்தில் உங்களுக்கான பாதை உருவாக்கம் என்று கூறும்போது அது ஒற்றுமையின்பாற்பட்டே அமைந்திருக்க வேண்டும் என்பதை நீங்கள் மறக்க வேண்டாம். ஏற்கனவே விழுது பல இடங்களில் அதன் விழுதுகளைப் பதித்துள்ளது. ஆனால் அது மட்டும் போதாது. உங்களைப் போன்ற பாதிக்கப்பட்ட பெண்களுக்காகப் பாடுபடும் பல்வேறு நிறுவனங்களுடன் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தி உங்கள் ஒற்றுமையைப் பலப்படுத்த வேண்டும்.

அரசியலிலும் இதைத்தான் செய்ய வேண்டும். நண்பர் சித்தார்த்தன் இதை உணர்ந்துள்ளார். நண்பர் ஸ்ரீதரன் எந்தளவுக்கு உணர்ந்துள்ளார் என்பது அவரின் அரசியல் நண்பர்களுக்குத் தான் வெளிச்சம்.

ஒற்றுமைக்கு எதிரி அகந்தை. தாங்கள் மட்டுந்தான் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மை பெற்றுக் கொடுக்க முடியும் என்று யாராவது சிந்தித்தால் அது அகந்தையாகும். எவ்வாறு நாம் எல்லோரும் சேர்ந்து எமது தகைமைகளை ஒன்று சேர்த்து பாதிக்கப்பட்ட மக்கள் நலன் கருதி கருமமாற்றலாம் என்று சிந்தித்தால் அது ஒற்றுமை பாற்பட்டது.

இன்று எமது பெண்களுக்கு அறிவு, ஆற்றல், புரிந்துணர்வுடன் ஒற்றுமை பற்றிய சிந்தனையும் மேலோங்க வேண்டும். அல்பர்ட் ஐன்ஸ்டைன் ஒரு முறை கூறினார், 'அறிவும் அகந்தையும் ஒன்றோடு ஒன்று உறவு உடையன. அறிவு குறையும் போது அகந்தை கூடுகின்றது' என்றார். ஆகவே தான் நாங்கள் ஒற்றுமைபாற்பட்டு சிந்திக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

ஒற்றுமை ஏற்பட்டால் உங்கள் குரலுக்கு ஒரு மதிப்பு ஏற்படும். அரசின் நிலைப்பாடுகள், அரசின் ஒதுக்கீடுகள், அரசின் கொடுப்பனவுகள், அரசின் பாரபட்சம் போன்ற விடயங்களை நீங்கள் ஒற்றுமையுடன் அரசிடம் கேட்டீர்களானால் அதற்கு அவர்கள் பதில் அளிக்க வேண்டிய கடப்பாட்டில் இருப்பார்கள். எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதற்கு உறுதுணையாக நிற்பார்கள். அரசாங்க அதிபர்களுடன் ஒரு நாளையும் நேரத்தையும் குறித்து உங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபைத் தவிசாளர்கள் அல்லது சமூக ஆர்வலர்கள் போன்றோருடன் சென்று உங்கள் கேள்விகளைக் கேட்டு பதில் பெறுங்கள்.

பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் என்ன? என்னென்ன திட்டங்களை வகுத்துள்ளீர்கள்? எம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான ஒதுக்கீடுகள் பற்றிய விவரங்களை எமக்குத் தரமுடியுமா? வடக்கு கிழக்கில் மாற்றுத்திறனாளிகளின் கொடுப்பனவுகளில் பாரபட்சம் காட்டப்படுவதேன்? கொடுப்பனவுகள் உரிய காலத்தில் கொடுக்கப்படாமைக்கான காரணங்கள் என்ன? மாற்றுத் திறனாளிகளுக்கான அடிப்படை வசதிகள் இன்னமும் வழங்கப்படாமைக்குரிய காரணங்கள் என்ன? பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான நிரந்தர வாழ்வாதாரத் திட்டங்கள் அரசாங்கத்தால் வகுக்கப்பட்டுள்ளனவா? அவற்றுக்கான ஒதுக்கீடுகள் ஏதேனும் உண்டா? வீட்டுத்திட்டம், சமுர்த்திக் கொடுப்பனவுகளில் பாரபட்சம் காட்டப்படுவதேன்? என்று கேட்டு அவ்வாறு பாரபட்சம் காட்டப்பட்ட தருணங்கள், சந்தர்ப்பங்களை அவர்களுக்கு எடுத்துரையுங்கள். அதிகாரிகளுடன் மக்கள் தொடர்பு வைத்திருத்தல் அவசியம். அதற்கு அதிகாரிகள் சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும். மக்களைக் காண நேரத்தை ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். முதலமைச்சராக அதைத்தான் நான் செய்தேன்.

அடுத்து உங்கள் பாதுகாப்பு, சுற்றாடல், சமூகப் பிரச்சினைகள் தொடர்பாக உப பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடுங்கள். உங்கள் பிரதேச பொலிஸாரின் பாரபட்சம் பற்றிப் பேசுவதென்றால் அவருக்கு அவற்றைத் தெரியப்படுத்துவது அவசியம். இல்லை என்றால் நாம் இது பற்றி வேறெங்கேனும் பேசும் போது எம்முடன் அவர்கள் இது பற்றி எதுவும் பேசவில்லை என்று பொலிஸார் கூறுவார்கள்.

நான் முதலமைச்சராக இருந்த போது உங்களைப் போன்றவர்கள் எனக்குத் தெரியப்படுத்திய விடயங்களைக் காலத்துக்குக் காலம் உப பொலிஸ்மா அதிபர், பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் போன்றவர்களுடன் கலந்துரையாடி அவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தேன். இப்பொழுது மாகாணசபை வழக்கழிந்து காணப்படும் நிலையில் ஆளுநர், அரசாங்க அதிபர்கள், மாவட்ட செயலாளர்கள், உப பொலிஸ்மா அதிபர் போன்றோருடன் தொடர்பு வைத்திருத்தல் அவசியம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்று அதிகாரத்தில் உள்ளவர்களின் சகாயத்தோடு தொடர்பு வைத்திருந்தால் கூடிய நன்மை பயக்கும்.

மணல் அகழ்வுகள், வாள்வெட்டு கலாசாரம், பெண்கள் பாதுகாப்பு யாவும் உயர் பொலிஸ் அதிகாரிகளுடன் பேச வேண்டிய விடயங்கள். தற்போதைய இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களையோ, முன்னைய உறுப்பினர்களையோ, பிரதேசசபை தவிசாளர்களையோ, உறுப்பினர்களையோ நீங்கள் உங்களுடன் அழைத்துச் சென்று குறிப்பிட்ட சமூகப் பாதுகாப்பு பற்றிய கேள்விகளுக்குப் பதில் கேட்பது சாலச் சிறந்தது. எமக்குள் பேசிப் பயனில்லை. உரியவர்களுடன் பேச வேண்டும். அவர்களின் உதவிகளையும் ஆதரவையும் வருவிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

சட்டத்தரணிகளின் ஆதரவும் உங்களுக்கு இருக்க வேண்டும். உங்கள் உறுப்பினர்கள் சட்டத்தரணிகளாகப் படித்து முன்னேறினால் உங்கள் முன்னேற்றம் மேலும் பலமுடன் சீக்கிரமாக நடைபெறும்.

அரசியல்வாதிகள் தாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் அரசியல் இலாபம் பெறவே பார்ப்பார்கள். அதைப் பொருட்படுத்தாமல் அவர்களின் ஒத்தாசையைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் காரியங்களில் கண்ணாயிருங்கள், சாதனைகளில் குறியாக இருங்கள் என்று கூறி எனக்கு இன்று உங்களுடன் அளவளாவ வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கின்றேன் என்றார்.

# ஆஸ்திரேலியா மெல்பனில் நூல் வெளியீட்டு அரங்கு!

ஆஸ்திரேலியாவில் மூன்று தசாப்த காலங்களுக்கும் மேலாக வதியும் சமூகப்பணியாளரும், தமிழ் அமைப்புகளில் அங்கம் வகித்திருப்பவருமான சபாரத்தினம் சுந்தரமூர்த்தி எழுதியிருக்கும் Dare to Differ நூலின் வெளியீட்டு அரங்கு இம்மாதம் 26 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு மெல்பனில் Glen Waverley Community Centre மண்டபத்தில் (692 - 724 , Waverley Road, Glen Waverley 3150 ) நடைபெறும்.

திருமதி பிருந்தா கோபாலனின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும் நூல்வெளியீட்டு அரங்கை, திருமதி பாக்கியம் அம்பிகைபாகர், கோபாலகிருஷ்ணன் ஆகியோர் மங்கல விளக்கேற்றி தொடக்கிவைப்பர்.

ஆஸ்திரேலிய பூர்வகுடி மக்களை நினைவுகூர்ந்தவாறு, இலங்கை உட்பட உலகெங்கும் போரால் மறைந்தவர்களுக்கும் கொவிட் பெருந்தொற்றால் இறந்தவர்களுக்கும் அகவணக்கம் செலுத்தப்பட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

எழுத்தாளர் முருகபூபதி, வழக்கறிஞர் ஜே. பிள்ளை ஆகியோரின் உரைகளைத் தொடர்ந்து, எழுத்தாளர் சட்டத்தரணி 'பாடும் மீன்' சு. ஸ்ரீகந்தராசா, கலாநிதி ஆனந்த ஜெயசேகரம், ஜூட் பிரகாஷ், ஆகியோர் நூல் நயப்புரை நிகழ்த்துவர். நூலாசிரியர் சபாரத்தினம் சுந்தரமூர்த்தி ஏற்புரை நிகழ்த்துவார்.



# ‘எல்லை தாண்டிய தரவு ஓட்டங்கள்’



## நுட்பியல் அவத்தை

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் - தகவல் தொழில்நுட்பம்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

கொரோனாத் தொற்றுநோயின் தாக்கம் உலகளாவிய டிஜிற்றல் தளங்களின் உருவாக்கம் மற்றும் பாவனையை அதிகரித்திருக்கின்றன. முன்னணி டிஜிற்றல் பிளாட் பார்ம்கள் தங்கள் இலாபத்திலும், சந்தையின் மதிப்பிலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை பதிவு செய்துள்ளன.

தொற்றுநோயைத் தொடர்ந்து பயணக்கட்டுப்பாடுகள், முடக்கநிலை நீடித்தாலும் மிகப் பெரிய நிறுவனங்கள் மிகப்பெரிய இலாபத்தை அடைந்துள்ளன. எடுத்துக்காட்டாக, அமேசான் அதன் ஒன்லைன் சில்லறை வணிகத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை பெற்று இலாபமீட்டுகிறது. மின் வணிகத்தை அதிகரிக்க. அமேசான் தனது கிளவுட் வணிக நடவடிக்கைகளில் பெரும் அதிகரிப்பைக் கண்டுள்ளது.

அதிகரித்த இணைய தேவை காரணமாக. மைக்ரோசாப்ட் நிறுவனம் தொடர்ந்து இலாபமடைந்து வருகின்றது. இதே போல் ஆப்பிள் நிறுவனமும் உள்ளது. ஏனெனில் கொரோனா அச்சம் காரணமாக மக்கள் தங்கள் செயல்பாடுகளை ஒன்லைனில் செய்ய அதிகளவில் நகர்ந்ததால், அதற்கான சாதனங்களுக்கான தேவை அதிகரிப்பதால் மைக்கிரோசொப்ட் நிறுவனம் மற்றும் அப்பிள் நிறுவனங்கள் அதிகளவு உற்பத்திசெய்வதோடு அதிக இலாபமும் அடைகின்றன.

உலகளாவிய டிஜிற்றல் பிளாட் பார்ம்களில் டிஜிற்றல் விளம்பரங்கள் அதிகரித்திருக்கின்றன. இதனாலும் மேலே சொன்ன பெரிய நிறுவனங்கள் இந்த சந்தையில் தங்கள் மேலாதிக்க நிலையை தொடர்ந்து பலப்படுத்தி வருகின்றன. 2022க்குள், டிஜிற்றல் விளம்பரச் செலவு மொத்த ஊடக விளம்பரச் செலவில் 60 சதவீதத்தை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

மேலும் கொரோனா காரணமாக ஒன்லைன்



வணிகம், இணையவழி வீடியோக்கள் பாவனை மற்றும் கேமிங், சமூகத்திற்கான தேவையை அதிகரித்தது. இதனால் நெட்வொர்க்குகள் மற்றும் வீடியோ கான்பரன்சிங் போன்றவற்றால் இந்த நிறுவனங்களின் நிகர வருமானத்தில் சாதகமான வளர்ச்சியை ஏற்படுத்தியது 2020 இல் மற்றும், குறிப்பாக, அமேசானின் நிகர வருமானம் 2020 ஆண்டுடன் ஒப்பிடும் போது இரண்டு மடங்கு அதிகமாகும்.

இன்று உலக வணிக மாதிரிகள் மற்றும் ஆதிக்கம், டிஜிற்றல் சேவைகளுக்கான வலுவான தேவையுடன் இணைந்துள்ளது. உலகளாவிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அதிக வருமான வளர்ச்சி இந்த டிஜிற்றல் ஜாம்பவான்கள் அதிகளவில் பணம் சம்பாதிக்கிறார்கள். இதே போன்று சீனாவின் முன்னணி டிஜிற்றல் தளங்கள் - அதாவது அலிபாபா, பைடு மற்றும் டென்சென்ட் - மேலும் பயனடைந்தன,

இந்த புதிய டிஜிற்றல் உலகில் தனிநபர் தரவுகள் தொடக்கம் பொதுத்தகவல்கள் வரை எல்லாமே எல்லை தாண்டி ஓடுகின்றன. இதனை ‘எல்லை தாண்டிய தரவு ஓட்டங்கள்’ என்று குறிப்பிடுகிறார்கள்.

இந்த எல்லை தாண்டிய தரவு ஓட்டங்கள் டிஜிற்றல் பொருளாதாரத்தின் சமீபத்திய போக்குகளில் மாற்றத்தை ஏற்படுத்தி அதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. குறிப்பாக பங்குசந்தைகளில் இந்த செல்வாக்கைக் காணலாம். இங்கு இந்த டிஜிற்றல் யுகம் அதாவது நுட்பியல் அவத்தை நிதிச் சந்தைகளுக்கும் உண்மையான பொருளாதாரத்திற்கும் இடையிலான தொடர்பைத் மாற்றுவது மிக முக்கியமாக, குறிப்பிடத்தக்கது.

ஒன்லைனில் சில்லறை வியாபாரப் பொருள்களை வாங்குவது முதல் டேட்டிங் இணையதளத்தில் ஒரு துணையக் கண்டறிவது வரை, நுட்பியல் அவத்தை நாம் செய்யும் அனைத்திலும் ஊடுருவுவதால், வாடிக்கையாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் முதலாளிகளுக்கு இடையிலான உறவுகளை டிஜிற்றல் தளங்கள் மறுபரிசீலனை செய்கின்றன. கம்பியூட்டிங் சக்தி வியத்தகு முறையில் மேம்படுவதால், உலகெங்கிலும் அதிகமான மக்கள் டிஜிற்றல் பொருளாதாரத்தில் பங்கேற்கிறார்கள், வேலை இடப்பெயர்ச்சியைக் குறைக்கும் அதே வேளையில் டிஜிற்றல் புரட்சியின் பலன்களை முழுமையாகப் பயன்படுத்த அனுமதிக்கும் கொள்கைகளை எவ்வாறு வகுக்க வேண்டும் என்பதையும் இந்தத் தருணத்தில் கவனமாக சிந்திக்க வேண்டும். பொதுநோக்கு தொழில்நுட்பம் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது.

மனிதகுலத்திற்கு பாரிய மாற்றத்தை டிஜிற்றல் நுட்பியல் அவத்தை கொண்டுவந்திருக்கிறது மேலும் கொண்டவரப்போகின்றது. இத்தகைய மாற்றங்கள் வரலாற்றில் அரிதானவை. மூன்று முந்தைய தொழில் நுட்பங்கள் மட்டுமே இந்த வேறுபாட்டைப் பெற்றன. நீராவி இயந்திரம், மின்சார ஜெனரேட்டர் மற்றும் அச்சு இயந்திரம். இந்த மாற்றங்கள் மகத்தான நீண்ட கால நன்மைகளைத் தருகின்றன. நீராவி இயந்திரம், முதலில் சுரங்கங்களில் இருந்து தண்ணீரை வெளியேற்ற வடிவமைக்கப்பட்டது, ஆனால் பின்னர் இயந்திர சக்தியின் பயன்பாட்டின் மூலம் ரயில் பாதைகள் மற்றும் தொழில்துறைக்கு வழிவகுத்தது. விவசாயிகளும் வணிகர்களும் தங்கள் பொருள்களை ஒரு நாட்டின் உள்பகுதியிலிருந்து கடற்கரைக்கு விநியோகம் செய்து, வர்த்தகத்தை எளிதாக்குவதற்கு உதவி பலன்கள் குவிந்தன.

புதிய தொழில்நுட்பத்தின் ஒரு முக்கிய அங்கம் என்னவென்றால், சமூகம் அதற்கு மாற்றியமைக்கும் முன் அது முதலில் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். மின்சார விநியோகம் ஜெனரேட்டர்களை சார்ந்தது. தற்போதைய தொழில்நுட்ப புரட்சியானது கணிணிகள், இணையத்தின் தொழில்நுட்பம், தேடு பொறிகள் மற்றும் டிஜிற்றல் தளங்களில் தங்கியுள்ளது.

டிஜிற்றல் புரட்சி நன்றாக நடந்து கொண்டிருக்கிறது. வேலைகள் மற்றும் திறன்களை மாற்றியமைப்பதுடன், இது சில்லறை விற்பனை மற்றும் வெளியீடு மற்றும் வங்கி போன்ற தொழில்களை மாற்றியமைக்கிறது. சீன ஈ - காமர்ஸ் நிறுவனமான அலிபாபா ஏற்கனவே ஒரு வங்கியை வைத்திருக்கிறது மற்றும் சீன நுகர்வோருக்கு சிறிய அளவிலான கடன்களை வழங்க அதன் வாடிக்கையாளர்களைப் பற்றிய அறிவைப் பயன்படுத்துகிறது. அமெரிக்க ஈ - காமர்ஸ் தளமான Amazon.com அதே திசையில் நகர்கிறது.

டிஜிற்றல் தொழில்நுட்பம் மேலும் பரவும், அதை புறக்கணிக்க அல்லது அதற்கு எதிராக சட்டம் இயற்றும் முயற்சிகள் தோல்வியடையும். ‘நீங்கள் செயற்கை நுண்ணறிவுக்கு ஆதரவா’ அல்லது ‘எதிராக’ இருக்கிறீர்களா என்பது கேள்வி அல்ல - இது நம் முன்னோர்கள் நெருப்புக்கு ஆதரவா அல்லது எதிராக இருந்ததா என்று கேட்பது போன்றது’ என்று Max Tegmark கூறினார். ஆனால் பொருளாதார சீர்குலைவு மற்றும் நிச்சயமற்ற தன்மை அரசியல் விளைவுகளுடன் எதிர்காலத்தைப் பற்றிய சமூக கவலையை தூண்டும். 1930 இல் ஜான் மேனார்ட் கெய்ன்ஸின் தொழிநுட்ப வேலையின்மை அதிகரிப்பு பற்றிய கவலைகளுக்கு இணையாக வேலை ஆட்டோமேன் பற்றிய தற்போதைய அச்சங்கள் உள்ளன. நிச்சயமாக, மனித குலம் நீராவி சக்தி மற்றும் மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்குத் தழுவியது என்பதை நாங்கள் அறிவோம், மேலும் டிஜிற்றல் புரட்சியின் மூலம் நாம்



மீண்டும் அவ்வாறான சமூகத்தை உருவாக்குவோம் என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்வோம்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் - 287

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**725.இப்படியான அரசியல் பாதைகளால் தமிழ் தேசியத்தின் அங்கலாய்ப்புகளுக்குத் தீர்வு கிட்ட வாய்ப்புகள் உள்ளனவா?**

தங்களது வரலாறுகள், சரித்திரங்களில் இருந்து ஏதும் கற்றுக் கொள்ளாதவர்கள் – கற்றுக் கொள்ள விரும்பாதவர்கள் – என்றும் எதுவுமே கற்றுக் கொள்ளப்போவதில்லை எனப் பலமுறை நான் குறிப்பிட்டிருந்தேன். அவற்றை உறுதிப்படுத்துபவை போலவே ஆயுதப் போராட்ட கால பிரிவினைகளும், பின்னரான அரசியலும் வளர்கின்றன.

விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்திற்கு ஆதரவாக ஒரு தலைமையின் கீழ், அரசியல் கட்சி அனுசரணையாக இருக்க வேண்டும் என விடுதலைப் புலிகளால் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இன்று நிலைமை என்ன? அவர்களிடையே கூட ஏன் இந்தக் குழப்பங்கள்?

சமஷ்டி என்ற கோரிக்கையை தமிழரசுக் கட்சி பல வருடங்களாக மக்களின் முன்வைத்து அரசியல் சிம்மாசனத்தில் இருந்தாலும், எதுவும் கூட அடையமுடியவில்லை. பின் தனித்தமிழ்நாடு எனத் தீர்மானம் எடுத்து, இந்திய ஒப்பந்தத்தின் பின் மாநில சுயாட்சியை நோக்கிய தீர்வாக பயணிக்க முயன்று, பின் கூட்டமைப்பாக அதனது அனுசரணைக் கட்சிகளுடன் மீண்டும் சமஷ்டியை முன்வைத்துள்ளது.

கூட்டமைப்பின் பழைய அங்கங்களில் ஒன்றான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 'ஒரு நாடு; இரு தேசம்' தான் தீர்வு என்று நாட்டையும் விடாமல், தேசத்தையும் வைத்து, மக்கள் அங்கீகாரம் கேட்டு, இந்த குழப்பம்தான் காரணமோ என்னவோ அவர்களின் கஜேந்திரன், விடுதலைப்புலிகள் நாடு கேட்டுப்போராடினார்கள், ஆனால் தேசத்தை பாதுகாக்கவே போரை நடத்தினார்கள் என்று சொல்லி, எதை எதையோ விளங்கப் படுத்த முயலுகிறார்.

மற்ற அங்கமான நீதியரசர் விக்னேஸ்வரன் கூட்டு சமஷ்டிதான் தீர்வாக வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.

டக்ளஸ் தேவானந்தா தான் இலங்கை – இந்திய ஒப்பந்த காலத்தில் இருந்தே 13ஆம் திருத்தத்தை ஏற்றுப் போக வேண்டும் எனக் கூறுகிறேன், அது யதார்த்தம், அதனை இப்போதாவது தேசியப் பரப்புகள் உணர்ந்து அதனை அமுல்படுத்தக் கோருவது யதார்த்த வழிகளில் முன்னேற ஊக்குவிக்கிறது என்கிறார். ஸ்ரீலங்கா அரசாங்கங்களுக்கு ஆதரவு தர தொடர்ச்சியாக இயங்கிய நாள்களிலிருந்து, போர் முடிந்த பின்னும், அவரது கட்சிக் காரியாலயத்தின் முகப்பில் தொங்கும் அறிவிப்பு 'மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி' என்றே இருக்கிறது. எந்த சுயாட்சியும் இதுவரை அவர் மூலமாகவும் தரப்படவில்லை. அதற்கான ஏற்பாடுகள் அவருடன் பேசப்படவில்லை.

போருக்குப் பின், (அவர் கருதும்) அந்த மாநிலமே இல்லாமல் ஆக்கப்படுகிறது. அரசாங்கத்தில் தேவானந்தா ஆளுமை மிக்க அமைச்சர். பெரும்பான்மைத் தலைவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். ஆனால் போரின் பின் நடக்கும் அபகரிப்புகள், திணிப்புகள் எதற்கு எதிராகவும் சுண்டுவிரலை அசைக்கவோ, சுட்டு விரலை நீட்டவோ இயலாத நிலையில் கட்டுண்டுதான் அவரும் நிற்கின்றார்.

இந்தத் தலைவர்கள் தரும் எல்லா தீர்வுகளுமே சிங்களப் பெரும்பான்மையின் இணக்கத்தினால்தான் பெறப்படவேண்டும். இவ்வளவு அட்டூழியங்களுக்கும் தமிழ் மக்களை ஆளாக்கிய பின்னரும் பெரும்பான்மை சிங்கள மக்களுக்கும் அவ்வாறான இணைக்க மனப்பான்மை இல்லை. அவை உருவாகின்ற சாத்தியங்களும் தெரியவில்லை. நடந்தவற்றை நியாயப்படுத்தும் பெரும்பான்மை மமதைதான் தொனிக்கின்றது.




'மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி!'

1956 இல் முஸ்லிம் அங்கத்தினர் நாடாளுமன்றத்தில் தொப்பி அணிவதை பெரும்பான்மையினர் தடுக்கலாம் என ஜெயவர்த்தனா பேசிய பொழுது, அப்படியானால் தான் திருநீறு அணிந்து நாடாளுமன்றத்திற்கு வருவதை தடுத்தால் தனது முட்டிதான் அவர்களுக்குப் பதிலளிக்கும் என சுந்தரலிங்கம் சூளுரைத்தார்.

ஆயுதப் போராட்டம் தான் ஒரே வழி, அதன் மூலம் தனி நாடு அமைக்க சிங்கள மக்களின் இணக்கம் தேவையில்லை, தானே அதனை ஆக்குவேன் என்று பிரபாகரன் மட்டுமே, இந்திய ஒப்பந்தத்தின் பின்னும் முஷ்டியை நிஜமாகவே பாவித்து, பேரினவாதத்திற்குக் கிலியை ஏற்படுத்தியவர். அதுவும் முரட்டுத்தனத்தாலும் சாணக்கியத்தாலும் அழிக்கப்பட்டு, 'ஒரு நாடு; ஒரே சட்டம்'தான் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டு, மாநிலங்கள் அவற்றில் அடங்கவில்லை என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

தேவானந்தாவின் கட்சி காரியாலயத்தின் முன்னுள்ள அறிவிப்பு பலகை மாற்றப்பட்டு புதிய செய்தி வருமோ தெரியாது.

இவர்கள் யாவருமே தாங்கள் பறைசாற்றுகின்ற தீர்வை அடையும் வழிகள் எது என்பதைச் சொல்லுவதில்லை. பாதை என்று ஒன்று இல்லாமல், மக்களை எல்லா வழிகளிலும் இழுத்து, திக்கு தெரியாத காட்டில், கண்களையும் கட்டி, வித்தை காட்டுகின்றார்கள்.

**726.இந்தத் தலைவர்களிடம் இருந்து ஏதும் திட்டங்களோ, வழிகளோ புலப்பட சந்தர்ப்பம் உண்டா?**

டக்ளஸ் தேவானந்தா தனக்கு மேலும் ஆசனங்களைத் தமிழ் மக்கள் தந்தால் அதன் ஊடாக சிங்கள பெரும்பான்மையுடன் ஒரு நியாயமான தீர்வுக்கு (13ஆம் திருத்தத்தின் அமுலாக்கமாக இருக்குமோ?) – இணக்கத்துக்கு –வருவேன் என்கிறார். அது அவரது திட்டம். சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் பொன்னம்பலம் அருணாசலம், செல்வநாயகம் வரிசையில் இதுவும் ஆகுமோ என்ற ஆதங்கம் மக்களுக்கு உண்டு. அது நடைமுறைப்படுத்தப்படும் என்று எழுத்து மூலமான அறிவிப்புடன்தான் தேவானந்தா மக்களிடம் போனால் சிறிதளவாவது நம்பிக்கை தோன்றலாம். ஆனால் எழுத்தில் அப்படியிருந்த ஒப்பந்தங்களின் வரலாறுகளை அவர் படித்துக் கொள்ள வேண்டும்.

மற்றவர்கள் எல்லோரும் அழுத்தங்களைப் பற்றித்தான் பேசுகிறார்கள். சர்வதேச அழுத்தங்களை சொல்லி, ஏதோ நடந்துவிடும், வானத்திலிருந்து பொழியும் என்று கடந்த 12 வருடங்களை ஓட்டிவிட்டார்கள். பெரும்பான்மையினர் இணங்குவார்கள் என்ற நம்பிக்கையும் சிலரிடம் உண்டு. அங்கங்கே தோன்றும் – கருக்கட்டும் – மேகங்களையும் மின்னல்களையும் காட்டிப் பரவசங்கள் தரப்படுகின்றன.

ஆனால் ஒன்றிலும் காணமுடியாமல் இருப்பது ஒற்றுமை, ஒருமைப்பாடு என்பதுதான்.

கரந்துறையும் பொந்துகளும், சுயநலன்களும், ஈகோக்களுமே மலிந்துள்ளன.

இலட்சியமமோ, அதனின் நோக்கமோ சீரியதானதாகவும் திண்மையானதாகவும் வேண்டும்.

தேவைக்காக, பூக்களை தேடித்தான் தேனீ அமரும். அப்படி பூக்களிலிருந்து சேர்த்தவைகளில், தேன் கூட்டில் தேனைத்தான் உருவாக்கும். அதில் அதற்கு ஒரு கௌரவம் வந்து சேர்கிறது.

ஆனால் சாதாரண ஈயோ ஆண்டவனின் பிரசாதத்தில் இருந்து விட்டு, அடுத்த நேரம் அருகில் இருக்கும் குப்பை கூழத்திலும், என் மலத்தில் கூட இருந்து, பின்னர் வந்து முகத்திலும் இருக்கும். ஆகவே ஈ சாதாரணமாகவே அது பார்க்கப்படுகின்றது.

தமிழ் மக்களின் தலைவர்கள் அவர்களின் உரிமை போராட்டத்தில் எடுத்த நடவடிக்கைகள், இருந்த இடங்களால் தங்களை ஈக்களாகவே தராதரப் படுத்தி, சர்வதேசமும் அவர்களை அப்படிக் கணிக்க வைத்திருக்கின்றார்கள். இவர்கள் இலட்சியவாதிகள் என்ற கௌரவத்தைப் பெற்றுக் கொள்ளத் தவறுகின்றார்கள். அவர்களுக்கிடையே இருந்த ஒற்றுமையீனம், அகங்காரங்கள் ஈகோ அவர்களையும் இழுத்து விழுத்தி, தமிழ் மக்களது உரிமை போராட்டம் உயரப் பறக்காது இழுத்தி, இழுத்தியே விழ உதவி செய்தது.

முக்கனிகளில என்றே மாம்பழம். எப்பொழுதுமே அது பூசைக்கு தரப்படுவது. ஆனால் செம்பாட்டு மாம்பழம் ஒதுக்கப்பட்டுவிடும். தவறுதலாக தரப்பட்டாலும் பூசகர், அவதானித்தால் அதனை எடுத்து விடுவார்.

ஏன்?

செம்பாட்டு மாமரம், பூக்கின்ற காலத்திலேயே ஒரு வண்டு தனது முட்டைகளை பூக்களிலே இட்டு விடுவதால், பிஞ்சிலிருந்தே புழுக்கள் அதனோடு வளர்ந்து பழமாகும் போது வண்டாக இருக்குமாதலால், அதனைப் பூஜைக்கு ஏற்றதாகத் தருவதில்லை. தமிழ் மக்களிடையே ஒற்றுமையீனம் என்ற இந்த புழு அவர்கள் எதனை ஆரம்பித்தாலும், பூவிலிருந்தே அவற்றுடன் வளர்ந்து செம்பாட்டு மாம்பழம் போல் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

தொடரும் காரியங்கள் இதனையே, கோடி காட்டுகின்றன. இந்தத் தீர்க்கதரிசனங்களைத் திரும்பவும் சொல்லுகின்றன.

(வளரும்)

# மக்களுக்கு உண்மை நிலைமையை அரசு வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும்

## ஆளும் தரப்பின் நாடாமன்ற உறுப்பினர் வலியுறுத்து

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடியின் உண்மை நிலையை மக்களுக்கு அரசாங்கம் வெளிப்படையாக தெரிவிக்கவேண்டுமென ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி கோரிக்கை விடுத்துள்ளார்.

காலி பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

மக்களைத் திசைதிருப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அது சமூக கட்டமைப்பில் பாதிப்பை ஏற்படுத்தும். சமூகக் கட்டமைப்பில் பல பிரச்சினைகள் தற்போது தோற்றம் பெற்றுள்ளன. அரசியல் காரணிகளுக்கு அப்பாற்பட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் குறித்து அவதானம் செலுத்துவது மக்கள் பிரதிநிதிகளின் பிரதான பொறுப்பாகும்.

மக்கள் மத்தியில் அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடனும்,உண்மைத் தன்மையுடனும் செயற்படுகிறதா என்பது கேள்விக்குரியதாக உள்ளது. நெருக்கடி நிலைமையை நாட்டு மக்களிடமிருந்து மறைக்க அரசாங்கம் மக்களை திசை திருப்பும் செயற்பாடுகளில் ஈடுபடுவது பல்வேறு சம்பவங்கள் ஊடாக விளங்கிக் கொள்ள முடிகிறது.

தேசிய மின்னுற்பத்தி மற்றும் மின்விநியோக கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண பொறுப்பான அமைச்சு உரிய நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதை அவதானிக்க முடியவில்லை. மின்விநியோகம் துண்டிக்கப்படும் என இலங்கை மின்சாரசபை தெரிவிக்கிறது.

ஆனால் மின்சாரத்தை துண்டிக்க அனுமதி வழங்க முடியாது என இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு குறிப்பிடுகிறது. எத்தரப்பினரது கருத்தை ஏற்பது என்ற சிக்கல் நிலைமை மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. - என அவர் தனது விசனத்தை வெளியிட்டுள்ளார்.

# கல்வி எமது இனத்தின் மிகப்பெரிய கொடை!




சாள்ஸ் எம்.பி. தெரிவிப்பு

கல்வி எமது இனத்தின் மிகப்பெரிய கொடை. இன்று உலகம் பூராகவும் கல்விக் கொடை பரந்து காணப்படுகின்றது. எமது மாணவர்கள் அதனைத் திறம்பட செய்து வருகின்றனர். புலம்பெயர் தேசங்களில் உள்ள எமது உறவுகள் வடக்கு கிழக்கில் உள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பு செய்து வருகிறார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வன்னி மண் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் கல்விக்குக் கரம் கொடுப்போம் எனும் தொனிப்பொருளில் தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் 38 பேருக்கு மடிக்கணினிகள் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை காலை 10 மணியளவில் மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் கலந்துகொண்டார்.

இதன் போது தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கி வைக்கப்பட்ட பின் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

'கல்விக்கு கரம் கொடுப்போம்' என்பது வடக்கு கிழக்கு பிரதேசங்களில் கல்வியினுடைய ஆரம்ப காலத்தில் 1972 ஆம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதி தரப்படுத்தல் வருவதற்கு முன்பாக இலங்கையின் பல்வேறு துறைகளில் பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்கள் வடக்கு கிழக்கில் அதிகமானவர்கள்.

ஆனால் தரப்படுத்தலின் பிற்பாடு மாவட்டங்களின் வரையறை மட்டுப்படுத்தப்பட்டு வரையறைக்குள் உட்படுத்தப்பட்டே பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படுகிறது.

ஆனால் கிடைக்கப்பெறுகின்ற அனுமதியை நாங்கள் தகுந்த முறையில் கொண்டு செல்ல வேண்டும்.

பல்கலைக்கழக அனுமதியை நாங்கள் பெற்றுக் கொள்ளுவதோடு, எங்களுடைய பிரதேசத்துக்கு , எமது மாவட்டங்களுக்கு நாங்கள் முழுமையான கல்வியை மட்டும் கற்றால் போதாது. எம்மைச் சூழ உள்ளவர்களையும் நாங்கள் கல்வி கற்க ஊக்குவிக்க வேண்டும்.

அல்லது அவர்களுக்கு எங்களால் முடிந்த உதவியை பொருளாகவோ அல்லது பணமாகவோ அல்லது ஆலோசனையாகவோ கட்டாயம் நாம் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஒவ்வொரு பாட நெறிகளுக்கும் குறிப்பிட்ட மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்ற போது அடுத்த நிலை மாணவர்கள் எங்கு செல்வது என்று தெரியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இன்று இவ்வாறானவர்கள் பல்துறை அரச நிறுவனங்கள் ஊடாக டிப்ளோமா தரத்தில் உள்வாங்கப்பட்டு இருந்தாலும் அவர்களுக்கு மனக் குறை ஒன்று உள்ளது.

நாங்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்கிற ஒரு மனக்குறை அவர்கள் மத்தியில் காணப்படுகின்றது.

எனவே மாணவர்களாகிய நீங்கள் உங்களால் முடிந்த யாராக இருந்தாலும் கல்வியை மற்றவர்களுக்குப் புகட்ட வேண்டும்.

கல்வி மிகப் பெரிய ஒரு செல்வம். எனவே மற்ற செல்வங்களை போன்று நாங்கள் கல்வியைக் கருத முடியாது.

மாவட்டமாக இருக்கலாம், பிரதேசமாக இருக்கலாம் கல்வியின் மூலமாகவே வளர்ச்சி அடையும்.

புலம்பெயர் தேசங்களில் இருக்கும் எமது வடக்கு கிழக்கை சேர்ந்த சிறுவர்கள், மாணவர்கள் கல்வியில் சாதனை புரிகின்ற அளவுக்கு அவர்களின் பெறுபேறுகள் அமைந்துள்ளன.

கல்வி எமது இனத்தின் மிகப்பெரிய கொடை. இன்று உலகம் பூராகவும் கல்விக் கொடை பரந்து காணப்படுகின்றது. எமது மாணவர்கள் அதனைத் திறம்பட செய்து வருகின்றனர்.

புலம்பெயர் தேசங்களில் உள்ள எமது உறவுகள் இங்குள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பு செய்து வருகிறார்கள்.

புலம்பெயர் தேசங்களில் இருக்கும் உறவுகளை நாங்கள் கௌரவிக்க வேண்டும் என்பதற்காகவே நாங்கள் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மன்னார், மடு கல்வி வலய அதிகாரிகள், உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# யாழ்ப்பாணத்தில் மைத்திரி விசேட வழிபாடு





(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன நேற்று யாழ்ப்பாணத்தின் மதத் தலங்களுக்கு விஜயம் மேற்கொண்டு விசேட வழிபாடுகளை மேற்கொண்டார்.

நல்லூர் கந்தன் ஆலயத்துக்கு சென்று விசேட வழிபாடுகளை மேற்கொண்ட அவர், பின்னர் ஆரியகுளம் நாகவிகாரைக்குச் சென்று வழிபட்டார்.

அவருடன் விசேட வழிபாடுகளில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இராஜாங்க அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர, துமிந்த திஸாநாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உயர்மட்ட தலைவர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

நேற்று மாலை பருத்தித்துறையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட மாநாடு இடம்பெற்ற நிலையில் சுதந்திரக் கட்சியின் தலைவர்கள் பலரும் யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிய மேலதிக செயலாளர் ஜனாதிபதிக்கு நியமனம்

பிரதமரின் முன்னாள் மேலதிக செயலாளரான சட்டத்தரணி சமிந்த குலரத்ன ஜனாதிபதியின் மேலதிக செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை அவர் நாடாளுமன்றத்தில் அரசாங்க பிரதம கொறடாவின் செயலாளராகவும் பணியாற்றுகிறார்.

சட்டத்தரணி சமிந்த குலரத்ன 20 ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு அரசுப் பதவிகளில் பணியாற்றிய அனுபவம் கொண்டவர் ஆவார்.

அத்தோடு லண்டனில் உள்ள 120 ஆண்டுகளுக்கும் மேலான தூதரக அதிகாரிகளின் சங்கத்தின் துணைத் தலைவராகப் பணியாற்றிய முதல் தெற்காசியர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 37 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோலுடன் கொழும்பு துறைமுகம் வந்தடைந்த கப்பல்

கொழும்பு, பெப். 21

37 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல் தாங்கிய கப்பல் ஒன்று சனிக்கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

சிங்கப்பூர் முகவர் மூலம் வழங்கப்பட்ட எரிபொருள் அடங்கிய கப்பல் இந்தியாவில் இருந்து இலங்கையை வந்தடைந்துள்ளதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்றும் 37 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் டீசல் தாங்கிய கப்பலொன்று நாட்டை வந்தடைந்தது என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் அதற்கான கொடுப்பனவை செலுத்தும் பணிகள் இடம்பெறுகின்றன எனவும் குறிப்பாக இலங்கை மத்திய வங்கிக்கு உரிய கொடுப்பனவுகள் ரூபாவில் செலுத்தப்பட்டுள்ளன எனவும் அமைச்சு அறிவித்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.02.2022இல் வெளியிடப்பெற்றது.